# இஸ்ரேலில் தங்கியிருக்கும் இலங்கையர்களுக்கு விசா வழங்குவதற்கான விசேட வேலைத்திட்டம்!

## இலங்கைத் தூதரகத்தினால் ஆரம்பிக்கப்பட்டது



விசா அனுமதிப்பத்திரம் இன்றி இஸ்ரேலில் தங்கியிருக்கும் இலங்கையர்களுக்கு விசா வழங்குவதற்கான விசேட வேலைத்திட்டமொன்று இஸ்ரேலில் உள்ள இலங்கைத் தூதரகத்தினால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

விசா இன்றி சட்டவிரோதமான முறையில் இஸ்ரேலில் தங்கியிருக்கும் இலங்கையர்களுக்கு விசா வழங்கும் செயற்பாட்டுக்காக, அங்கிருக்கும் இலங்கையர்களின் தகவல்களைத் திரட்டும் வேலைத்திட்டம் நேற்று ஆரம்பமாகியுள்ளது.

இதற்கான பணிகள் இஸ்ரேலில் இருக்கும் இலங்கைத் தூதரகத்தில் இடம்பெறும் என இஸ்ரேலுக்கான இலங்கைத் தூதுவர் நிமல் பண்டார தெரிவித்துள்ளார்.

இஸ்ரேலின் குடிவரவு குடியகல்வுப் பிரிவின் பணிப்பாளர் நாயகம் எயல் சிஸ்சோ உள்ளிட்ட அதிகாரிகள் சிலர் இலங்கைத் தூதரகத்துக்கு வந்து, தூதுவருடன் கலந்துரையாடியுள்ளனர்.

இதன்போது விசா இல்லாமல் தாதியர் சேவையில் இருக்கும் ஊழியர்கள் மற்றும் ஏனைய பிரிவுகளில் பணிபுரியும் இலங்கையர்களுக்கு விசா அனுமதிப்பத்திரங்களை வழங்குமாறு வலியுறுத்தப்பட்டுள்ளது.

2 ➤

மாலைக்கதிர்
Maalaikkathir
சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2054 ஐப்பசி 08 புதன்கிழமை 25.10.2023 கதிர் 99

யாழ்ப்பாணத்தில் இருந்து ஒரு புதிய வியாபாரக்குறி!
A new brand from Jaffna!
பூ ஆடை
PooAadai
ஆண், பெண் இருபாலாருக்குமான ஆடைகள்

# ஜனாதிபதி ரணிலுக்கு கூட்டணி அரசியல் தொடர்பாகத் தெளிவில்லை - நாமல்



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, கூட்டணி அரசியல் தொடர்பாக விளங்கிக் கொள்ளவேண்டும் என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச தெரிவித்திருக்கிறார்.

கொழும்பில் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

கூட்டணி அரசாங்கமொன்றில், ஏதேனும் முக்கியமான தீர்மானமொன்று எடுக்கப்பட வேண்டுமாக இருந்தால் கட்சித் தலைவர்களுடன் கலந்தாலோசிக்கப்படும்.

ஆனால், கடந்த காலங்களில் அவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுடன் கலந்தாலோசிக்கவில்லை என்ற

2 ➤

# கால்நடைகளைத் திருடினால் 10 இலட்சம் ரூபா அபராதம்!

கால்நடைகளைத் திருடுபவர்களுக்கான அதிகபட்ச அபராதத் தொகையான 50,000 ரூபாவை 10 இலட்சம் ரூபாவாக உயர்த்த தீர்மானித்துள்ளதாக விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

மேலும், இதுபோன்ற திருட்டுகளுக்குக் குறைந்தபட்சம் ஓராண்டு கடூழியச்

2 ➤

# முதுமையில் உள்ள இரா.சம்பந்தன் எம்.பி. பதவியைத் துறக்க வேண்டும்

## சுமந்திரன் பகிரங்கக் கோரிக்கை



இலங்கைத் தமிழரசுக் கட்சியின் சிரேஷ்ட தலைவரும் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் அவருடைய முதுமை காரணமாக செயற்பாட்டு அரசியலில் பங்களிப்புச் செய்ய முடியாதிருப்பதன் காரணமாக அவர் தனது நாடாளுமன்ற உறுப்பினர் பதவியைத் துறக்க வேண்டும் என்று அக்கட்சியின் பேச்சாளரும்,

2 ➤

# மீன் இறக்குமதியில் முறைகேடு இருப்பதாகத் தெரியவில்லை!

## அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா



இலங்கையில் பிடிக்கப்படாத மீன்களையே இறக்குமதி செய்ய அனுமதித்துள்ளதாக கடல் தொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்திருக்கிறார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகச் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், சீனாவிடம் இருந்து மீன்கள் இறக்குமதி செய்யப்படுவது தொடர்பாக வெளியான தகவலில் உண்மைநிலை இருப்பது போல் தெரியவில்லை. இலங்கைக் கடற்தொழில் கூட்டுதாபனத்தைக் கண்காணிக்கின்ற, செயற்படுத்துகின்ற பொறுப்பை என்னுடைய இராஜாங்க அமைச்சருக்குத்தான் கொடுத்திருக்கின்றேன். அவர் நேர்மையாக , நியாயமாக, சட்டபூர்வமாக செய்ததாகத்தான் கூறுகின்றார்.

2 ➤

# இறக்குமதி செய்கின்ற மீன்களையே உண்ணவேண்டிய நிலை ஏற்படும்!

## சிறிதரன் எம்.பி. சுட்டிக்காட்டு

தற்பொழுது இலங்கையின் நாடாளுமன்றம் கோமாளிகளின் கூடாரமாக மாறி உள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் தெரிவித்திருக்கிறார்.

இன்று கிளிநொச்சியில் அமைந்துள்ள அவரது அலுவலகத்தில் நடத்திய ஊடகச் சந்திப்பிலே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இலங்கையில் தற்பொழுது அதிகமானவர்கள் ஒருவேளை உணவையே உண்ணும் நிலை ஏற்பட்டுள்ளது.



அதிலும் சிலர் ஒருவேளை உணவைக் கூட உண்ண முடியாத

2 ➤

# சார்ள்ஸ் நிர்மலநாதன் எம்.பி.யின் தலையீட்டினால் விவசாயக் காணிகளை மீண்டும் வழங்க நடவடிக்கை

வவுனியா - செட்டிகுளம் பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட வீரபுரம் கிராம மக்களுக்கு 1994 ஆம் ஆண்டு அரசாங்கத்தினால் ஒதுக்கப்பட்ட விவசாயக் காணிகள் யுத்த காலத்தில் ஏற்பட்ட இடப்பெயர்வின் காரணமாக மக்கள் பயன்படுத்த முடியாதவாறு காணப்பட்டன.

மீண்டும் மீள்குடியேறிய மக்களுக்கு அக்காணிகளுக்குச் செல்வதற்குத் தடை ஏற்படுத்தப்பட்டு வந்தது. மக்களின் பல ஏக்கர் காணிகள் மாற்று இனத்தவர்களால் சுவீகரிக்கப்பட்டு வருகின்றமை தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதனின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டிருந்தது.

அதன் அடிப்படையில், நீண்ட கால முயற்சியின் பலனாக நேற்று நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதனின் தலைமையில் வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர், வெங்கல செட்டிக்குளம் பிரதேசச் செயலாளர், கிராம அலுவலர் மற்றும் பொது அமைப்பின் பிரதிநிதிகள் எனப் பலரும் குறிப்பிட்ட இடத்திற்கு நேரடியாகக் கள விஜயம் செய்து நிலைமைகளை அவதானித்துடன் பொது அமைப்புக்களின் கருத்துக்களையும் கேட்டறிந்தனர்.

இதன் பிரகாரம், இப்பகுதி

2 ➤

- பக்கம் சாராச் செய்திகளுடன் மக்களுக்கான மாலை இதழ் -

# அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் மேலும் குறைந்தன

லங்கா சதொச நிறுவனம் நான்கு அத்தியாவசியப் பொருட்களின் விலைகளைக் குறைத்துள்ளது.

அதன்படி, சம்பா அரிசி ஒரு கிலோ - 6 ரூபாவினால் குறைக்கப்பட்டு 222 ரூபாவுக்கும், கொண்டைக் கடலை ஒரு கிலோ- 6 ரூபாவினால் குறைக்கப்பட்டு 549 ரூபாவுக்கும், பருப்பு ஒரு கிலோ - 5 ரூபாவினால் குறைக்கப்பட்டு 295 ரூபாவுக்கும், சிவப்பு அரிசி ஒரு கிலோ - 3 ரூபாவினால் குறைக்கப்பட்டு 169 ரூபாவுக்கும் இன்றுமுதல் விற்பனை செய்யப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (04)

# யாழ்ப்பாணம் இந்து ஆரம்பப் பாடசாலையின் வாணிவிழா





யாழ்ப்பாணம் இந்து ஆரம்பப் பாடசாலையின் வாணிவிழா திங்கள் காலையில் அதிபர் பே. தன பாலசிங்கம் தலைமையில் நடைபெற்றது

நிகழ்வில் பிரதம விருந்தினராக கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் அதிபர் செந்தமிழ்ச் சொல்லருவி சந்திரமௌலீசன் லலீசன் கலந்து கொண்டார்.

நவராத்திரியை ஒட்டி மாணவர்களிடையே நடத்தப்பட்ட போட்டிகளுக்கான பரிசளிப்பு நிகழ்வு மற்றும் மாணவர்களின் பேச்சு, இசை, நடன நிகழ்வுகள் இடம்பெற்றன.

## சார்ள்ஸ் நிர்மலநாதன் எம்.பி.யின் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மக்களின் வாழ்வாதாரங்களை மேம்படுத்துவதற்காகப் பல ஆண்டுகளுக்கு முன்பு வீரபுரம் மக்களுக்கு என ஒதுக்கப்பட்ட காணிகளை வழங்குவதற்கு விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும் என அரச அதிபரினால் உறுதியளிக்கப்பட்டுள்ளது.

## இறக்குமதி செய்கின்ற ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிலையில் வாழ்ந்து வருகின்றனர். அந்த அளவிற்கு இலங்கையின் பொருளாதாரம் வீழ்ச்சி கண்டுள்ளது. இந்த நிலை தொடருமாயின் சோமாலியாவை விட எமது நாடு படு பாதாளத்தில் சென்றடையும்.

தற்பொழுது நாட்டில் ஏற்பட்டுள்ள மீன் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்வதற்காகவும் வைத்தியசாலைகளின் தேவைகளுக்காகவும் மீன் இனங்களை இறக்குமதி செய்வதாக கடல்தொழில் அமைச்சர் தெரிவித்துள்ளார். ஏற்கனவே எமது பகுதியில் உள்ள மீனவர்கள் ஆழ் கடலில் மீன் பிடிக்க முடியாத நிலையிலும் கரையோரங்களில் மீன் பாடு இல்லாமலும் தமது வாழ்வாதாரத்தை மேற்கொள்ள முடியாத சூழலில் வாழ்ந்து வரும் நிலையில், இப்படி இறக்குதி செய்வதை ஏற்கமுடியாது.

அட்டைப் பண்ணை மூலம் மீனவக் குடும்பங்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதாக கடல்தொழில் அமைச்சர் முன்னர் தெரிவித்திருந்தார். தற்போது கடலட்டைப் பண்ணையும் இல்லை, வாழ்வாதாரமும் இல்லை.

தற்பொழுது இலங்கையின் நாடாளுமன்றம் கோமாளிகளின் கூடாரமாக மாறி உள்ளது. கடல் தொழில் அமைச்சர் ஒரு தமிழனாக இருந்து கொண்டே தமிழர்களின் பிரச்சனையைத் தீர்க்க முடியாதவராக உள்ளார். அயல்நாட்டு மீனவர்களின் ரோலர் படகுகளால் வரும் பிரச்சினையைத் தீர்க்க முடியாத அமைச்சர், ரோலர் இரும்புப் படகும் மூலம் அவர்களை இடிப்பேன், என்று கூறியவர், தற்பொழுது சீனாவிடம் சென்று மண்டியிட்டு மீன் இறக்குமதி செய்வதாகத் தெரிவித்துள்ளார்.

இந்நிலை தொடருமாயின் இனிவரும் காலங்களில் இறக்குமதி செய்யப்படுகின்ற மீன் இனங்களையே நாங்கள் உண்ண வேண்டிய நிலை ஏற்படும் எனவும் மீனவர்களின் வாழ்வாதாரமும் இல்லாமல் அழிக்கப்படும் எனவும் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் தெரிவித்திருக்கிறார் தனது ஊடகச் சந்திப்பில் குறிப்பிட்டிருக்கிறார். (02)

## முதுமையில் உள்ள .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்ப்பாணம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் பகிரங்கமாகக் கோரியுள்ளார்.

தனியார் தொலைக்காட்சியொன்றில் கலந்துரையாடல் நிகழ்வில் பங்கேற்றபோது, 288 நாடாளுமன்ற நாட்களில் வெறுமனே 39 நாட்களில்தான் நாடாளுமன்றத்துக்கு இரா.சம்பந்தன் வருகை தந்திருக்கின்றார் என்பது தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் ஊடாகப் பெறப்பட்டுள்ள தகவல்களில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

அதனடிப்படையில், அவருடைய வருகை வீதம் 13.6 சதவீதமாக உள்ளது. அவ்வாறான நிலையில் அவருக்கு நாடாளுமன்ற படிகளாக 4 மில்லியன் ரூபா வழங்கப்பட்டுள்ளது. எரிபொருள், தொலைபேசி மற்றும் போக்குவரத்து உள்ளிட்டவற்றுக்காக 4 இலட்சத்து 19ஆயிரம் ரூபா வழங்கப்பட்டுள்ளது. இது மக்களின் வரிப்பணமாக உள்ளது. ஊழல் தடுப்புப் பற்றி பேசப்படுகின்ற இந்தச் சந்தர்ப்பத்தில் இதுவொரு மாற்று வடிவமாக அமைகின்றதா? என்று வினவப்பட்டபோது பதிலளிக்கையிலேயே சுமந்திரன் எம்.பி. மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"சம்பந்தனின் முதுமை காரணமாக அவர் தொடர்ச்சியாக நாடாளுமன்றத்துக்கு வருகை தர முடியாதிருக்கின்றமை தொடர்பில் நாங்கள் கரிசனைகளைக் கொண்டிருக்கின்றோம். விசேடமாக நான் அந்த விடயத்தில் கரிசனைகளைக் கொண்டிருக்கின்றேன்.

அந்தவகையில் நான் ஒரு விடயத்தை இந்தச் சந்தர்ப்பத்தில் பகிரங்கமாகத் தெரிவிக்க விரும்புகின்றேன். சில ஆண்டுகளுக்கு முன்னதாக அவரால் நாடாளுமன்றத்துக்குச் சமூகமளிக்க முடியாத நிலைமைகள் ஏற்பட ஆரம்பித்த சந்தர்ப்பத்தில் நான் சம்பந்தனிடத்திலேயே நேரடியாகப் பதவி விலகுமாறு கோரினேன். அதன்போது சம்பந்தன் அதனை நிராகரித்திருந்தார். அத்துடன், அவர் அதற்கான காரணத்தையும் தெளிவுபடுத்தினார்.

2020ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலின்போது திருகோணமலை மக்கள் தன்னை அந்த மாவட்டத்தின் முதலாம் நபராகத் தெரிவு செய்திருக்கின்றார்கள். அவர்கள் தனது உடல் நிலைமைகளை அறிந்தே தெரிவு செய்திருக்கின்றார்கள் என்று குறிப்பிட்டார். அதனை சம்பந்தன் மீண்டும் நினைவுபடுத்தினார்.

எனினும், திருகோணமலை மக்களைப் பிரதிநிதித்துவம் செய்து செயற்படத்தப்பட வேண்டிய பல விடயங்கள் உள்ளன. பிறிதொரு பிரதிநிதியை நாங்கள் நியமித்தாலும் அவர் முழுமையான செயற்பாடுகளை ஆற்றுவாரா என்பது பற்றிய பல கரிசனைகள் உள்ளன.

எவ்வாறாயினும், சம்பந்தன் தனது முதுமை நிலைமை காரணமாக அவரால் செயற்பாட்டு ரீதியான விடயங்களை முன்னெடுக்க முடியாதுள்ளது. ஆகவே, அவர் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியைத் துறக்க வேண்டும் என்பதுதான் எனது தனிப்பட்ட கருத்தாகவுள்ளது. அடுத்துவரும் காலத்தில் அது தொடர்பான சில நடவடிக்கைகளை எடுப்போம்." - என்றார். (அ)

## மீன் இறக்குமதியில் முறைகேடு ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கைக் கடல் தொழிலாளர்களுக்குப் பாதிப்பு ஏற்படாத வகையில், இலங்கையில் மிகக் குறுகிய அளவில் அறுவடை செய்யப்படுகின்ற அல்லது அறுவடை செய்யப்படாத மீன்களைத்தான் இறக்குமதி செய்ய வேண்டும், என இலங்கைக் கடல் தொழில் கூட்டுத்தாபனத்திற்குப் பணிப்புரை விடுத்திருந்தேன்.

இறக்குமதியாகும் மீன்கள் நியாயமான விலையில், தரமானதாக, திணைக்களத்தின் சட்ட திட்டங்கள் உட்பட்டவையாக இருக்க வேண்டும். இவ்வாறே இறக்குமதி செய்ய முடியும் எனக் கூறியிருக்கின்றேன்.

அந்தவகையில்தான் இறக்குமதி செய்ததாகக் கூறுகிறார்கள். அதில் முறைகேடு இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. அவ்வாறு இருக்குமாக இருந்தால் நிச்சயம் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

ஆனால், ஊடகங்களில் தவறான செய்திகள் வெளிவந்துள்ளன. இது தொடர்பாக ஆராய்ந்து கொண்டிருக்கின்றேன், என்று தெரிவித்துள்ளார்.

## கால்நடைகளைத் திருடினால் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சிறைத்தண்டனை விதிக்கும் வகையிலான சரத்துக்களை உள்ளடக்கி, விலங்குகள் நலச்சட்டத்தில் திருத்தம் செய்ய கால்நடை மேம்பாட்டுத் துறைக்கு உத்தரவிட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கால்நடை பாதுகாப்புச் சட்டத்தின் புதிய திருத்தங்கள் தொடர்பாக விவசாய அமைச்சில் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலில் மாடு திருட்டுகள் அதிகரித்துள்ளமையைக் கருத்திற்கொண்டு அமைச்சர் இந்த அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளார்.

கடந்த வாரம் அனுராதபுரம் மாவட்டத்தில் நாள் ஒன்றுக்கு அதிகளவு பால் கொடுக்கும் பசுவும் திருடப்பட்டுக் கொல்லப்பட்டதாகக் குறிப்பிட்ட அமைச்சர் மஹிந்த அமரவீர, பசுத் திருட்டைத் தடுக்க நடவடிக்கை எடுக்குமாறு பொலிஸ் திணைக்களத்திடம் கோரிக்கை விடுத்துள்ளதாகவும் தெரிவித்தார். (04)

## ஜனாதிபதி ரணிலுக்கு ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குற்றச்சாட்டு கட்சியின் செயலாளர் உள்ளிட்ட பலரால் முன்வைக்கப்பட்டுள்ளது.

பொதுஜன பெரமுனவுக்கும் சுதந்திரக் கட்சிக்கும் இடையில் எந்தவித முரண்பாடும் கிடையாது.

எனினும், பதவிகள் மாற்றமடைவதால் மக்களின் பிரச்சினைகள் தீர்ந்துவிடாது.

ரணில் விக்கிரமசிங்கவுக்கு மட்டுமன்றி சஜித் பிரேமதாஸ, சரத்பொன்சேகா, அநுரகுமார திஸாநாயக்கவையும் அன்று நாம் அழைத்தோம். இவர்கள் யாரும் வரவில்லை.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மட்டும்தான் இந்தப் பொறுப்பை ஏற்றுக்கொண்டார். இதற்கான கௌரவத்தை நாம் அவருக்குக் கொடுக்க வேண்டும்.

ஆனால், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கூட்டணி அரசியல் தொடர்பாக விளங்கிக் கொள்ள வேண்டும்.

நல்லாட்சி அரசாங்கத்தின் காலத்தின்போதும் இரண்டு தலைவர்களும் வெவ்வேறாகச் செயற்பட்ட காரணத்தினால்தான் நாடு வீழ்ச்சியடைந்தது.

இவ்வாறு தற்போது இடம்பெற்றுவிடக்கூடாது என்பதற்காகத்தான், பேசித் தீர்மானங்களை மேற்கொள்ளுமாறு தெரிவிக்கிறோம், எனவும் நாமல் ராஜபக்ச குறிப்பிட்டிருக்கிறார்.

## இஸ்ரேலில் தங்கியிருக்கும் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அத்தோடு, விசா காலம் முடிவடைந்த பின்னரும் தொடர்ந்து இஸ்ரேலில் தங்கி இருக்கும் இலங்கையர்களின் விசா அனுமதிப்பத்திரத்தைப் புதுப்பிக்குமாறும் இஸ்ரேலிய குடிவரவு குடியகல்வுப் பிரிவின் பணிப்பாளர் நாயகத்திடம் கோரிக்கை விடுத்ததாக நிமல் பண்டார தெரிவித்துள்ளார்.

இந்தக் கோரிக்கைக்கு இஸ்ரேலின் குடிவரவு குடியகல்வு பிரிவின் பணிப்பாளர் நாயகம் இணங்கியதாகவும் விசா இனுமதிப்பத்திரம் இல்லாமல் தங்கி இருக்கும் இலங்கையர்களின் தகவல்களைக் கோரியதாகவும் தூதுவர் தெரிவித்துள்ளார்.

அவ்வாறே விசாக் காலம் முடிவடைந்த பின்னரும் இஸ்ரேலில் தங்கியிருக்கும் இலங்கையர்களுக்கு விவசாயப் பிரிவில் தொழில் வாய்ப்பைப் பெற்றுக் கொடுப்பதற்கும் பணிப்பாளர் நாயகம் இணங்கியதாகவும் தூதுவர் நிமல் பண்டார தெரிவித்துள்ளார்.


## விற்பனையாளர் தேவை

**நிறுவனம்:** யாழ்முற்றம்
**பால்:** இருபாலரும்
**வேலை நேரம்:** காலை 7:00 மணி - மாலை 7 மணி வரை
**சம்பளம்:** பேசித் தீர்மானிக்கப்படும்
**தொடர்புகளுக்கு:** +94 77 307 8799

உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com

செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட
காலைக்கதிர் TV
காலைக்கதிர் TV YouTube தளம்

# கல்முனை தனியார் வைத்தியசாலைகளில் தாய் சேய் நலப் பிரிவினை வலுப்படுத்தல்




(நூருல் ஹுதா உமர்)

கல்முனைப் பிராந்திய தனியார் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெறும் தாய் சேய் சுகாதார தரவுகளை புள்ளி விபரங்களுடன் திரட்டி, அதனை சுகாதார அமைச்சின் இனப்பெருக்க சுகாதார மேலாண்மைத் தகவல் அமைப்பு - 2 இல் மின்னணு முறையில் பதிவு செய்தல் தொடர்பான செயலமர்வு நேற்று கல்முனைப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் இடம் பெற்றது.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஐ.எல்.எம்.றிபாஸின் ஆலோசனை மற்றும் வழிகாட்டலின் கீழ் சுற்றுச்சூழல் மற்றும் தொழில்வாண்மை சுகாதாரப் பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி டொக்டர் ஏ.எஸ்.எம்.பௌஸாத் அவர்களினால் ஒருங்கிணைப்பு செய்யப்பட்ட குறித்த செயலமர்வு, பிரதிப் பணிப்பாளர் டொக்டர் எஸ்.ஆர். இஸ்ஸடீன் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் கல்முனை பிராந்திய தனியார் வைத்தியசாலைகளின் பிரதிநிதிகள் உத்தியோகத்தர்கள் எனப்பலர் கலந்துகொண்டனர். இதன்போது குடும்ப சுகாதாரப் பணியகத்தின் கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டுப் பிரிவு சமூக வைத்திய நிபுணர் கௌசல்யா கஸ்தூரியாராச்சி, சுகாதார தகவல் மருத்துவ அதிகாரி டொக்டர் உதயங்க யாப்பா பண்டார மற்றும் பிராந்திய சுற்றுச்சூழல் மற்றும் தொழில்வாண்மை சுகாதாரப் பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி டொக்டர் ஏ.எஸ். எம்.பௌஸாத் ஆகியோர் வளவாளர்களாக கலந்து கொண்டு விரிவுரையாற்றினர்.

## பாலமுனையில் வாழ்வாதார உதவி வழங்கும் நிகழ்வு



(எம்.எப். நவாஸ்)

91's Better Guidance அமைப்பின் தலைவரும் நாவுல பண்ணை நிறுவனத்தின் முகாமையாளருமான வை.எல்.எம்.றிப்கான் தலைமையில் பல்வகைப் பொருட்கள் கையளிப்பு மற்றும் வாழ்வாதார உதவி வழங்கும் நிகழ்வு அண்மையில் பாலமுனை மின்ஹாஜ் மகா வித்தியாலய கூட்ட மண்டபத்தில் இடம்பெற்றது.

இதன் போது வாழ்வாதார உதவியாக தேங்காய் திருவும் இயந்திரமும் வழங்கப்பட்டதுடன் பாலமுனை பிரிவுகளிலுள்ள விசேட தேவையுடைய நபர்கள், விதவைகள், வறிய குடும்பங்கள் போன்றவர்களுக்கு அரிசி, உணவுப் பொதிகளும் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் சீருடை அறிமுகமும் இடம்பெற்றதுடன் இவ்வமைப்பின் உறுப்பினரால் வாழ்வாதார உதவியாக 100,000 ரூபாய் பணமும் வழங்கி வைக்கப்பட்டது குறிப்பிடத்தக்கதாகும்.

இந்நிகழ்வின் போது அதிதிகளாகக் கலந்து கொண்ட அக்கரைப்பற்று ஏசியா செப் நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ஏ.எல்.எம்.அனஸ்தீன், ஓய்வு பெற்ற முன்னாள் அதிபர் எம்.சி.அப்துஸ் சமது, சஜிர் என்.பி.சம்சுடீன் ஆகியோர் பொன்னாடை போர்த்தி, நினைவுச்சின்னம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

இந்நிகழ்வில் இப்னுஸீனா வித்தியாலய அதிபர் ஜே.சைபுடீன், 91's Better Guidance அமைப்பின் நிருவாகத்தினர் மற்றும் பயனாளிகளும் கலந்து கொண்டனர்.

## ஓய்வு பெறும் விஞ்ஞான ஆசிரிய ஆலோசகருக்குப் பிரியாவிடை



(காரைதீவுச் செய்தியாளர்)

சம்மாந்துறை வலயக் கல்வி அலுவலகத்தில் விஞ்ஞான பாட ஆசிரிய ஆலோசகராக நீண்டகாலம் கடமையாற்றி ஓய்வு பெறும் எஸ்.எல். அக்பருக்கு இன்று பிரியாவிடை நிகழ்வு நடைபெற்றது.

இந்நிகழ்வு வலயக் கல்விப் பணிப்பாளர் டாக்டர் உமர் மௌலானா முன்னிலையில் இடம்பெற்றது.

பிரதிக் கல்விப் பணிப்பாளர்களான மஜீட், அரபாத், நிலோபரா மற்றும் உதவிக்கல்விப் பணிப்பாளர் பி.பரமதயாளன் உள்ளிட்ட கல்வி சார் உத்தியோகத்தர்கள் நிகழ்வில் கலந்துகொண்டனர்.

ஓய்வு பெறும் ஆசிரிய ஆலோசகர் அக்பர் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டார்.

வலய கல்விசார் உத்தியோகத்தர்கள் நலன்புரிச் சங்க தலைவர், உதவிக் கல்விப் பணிப்பாளர் வி.ரி. சகாதேவராஜா சிறப்புரையை நிகழ்த்தினார். ஆசிரிய ஆலோசகர்களான மன்சூர், றயிஸ்டீன் ஆகியோரும் உரையாற்றினர்.



# காரணம் இல்லாமல் ஹமாஸ் தாக்குதல் நடத்தவில்லை! ஐ.நா. பொதுச் செயலரின் கருத்தால் அதிர்வலைகள்

காஸாவில் இஸ்ரேல் நடத்தி வரும் தொடர் குண்டு வீச்சால், மத்திய கிழக்கு நாடுகளுக்கும் போர் பரவும் சூழல் ஏற்பட்டுள்ளது என்றும் காரணம் இல்லாமல் ஹமாஸ் தாக்குதல் நடத்தவில்லை என்றும் ஐ.நா. பொதுச் செயலர் அன்டோனியோ குட்டெரெஸ் தெரிவித்திருக்கின்றமை பல தரப்பிலும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது.

இஸ்ரேல் - காஸா போர் தொடர்பாக ஐ.நா. பாதுகாப்பு சபை கூட்டத்தில் பேசிய குட்டெரெஸ், 'இஸ்ரேலின் தொடர் குண்டு வீச்சு பெரும் அபாய ஒலியை ஏற்படுத்துகிறது. மத்திய கிழக்கு நாடுகளில் இது நாளுக்கு நாள் பதற்றத்தை அதிகரித்து வருகிறது. சர்வதேச மனித உரிமை சட்டம் இந்தப் போரில் மீறப்படுவது மிகுந்த வருத்தத்தை அளிக்கிறது. இந்தச் சட்டத்துக்கு அப்பாற்பட்டவர்கள் யாரும் இல்லை. சர்வதேச சமூகம் இதற்கு உட்பட்டு செயல்பட வேண்டும்.

உடனடியாக மனிதாபிமான அடிப்படையில் போரை நிறுத்த வேண்டும். 10 லட்சத்துக்கும் அதிகமானோரை தெற்கு காஸாவுக்கு பாதுகாப்பாக இடம்பெயருமாறு கூறிவிட்டு, அங்கேயும் இஸ்ரேல் குண்டுகளை வீசுகிறது. கடந்த 56 ஆண்டுகளாக பாலஸ்தீன மக்கள் ஆக்கிரமிப்பு, வன்முறை, பொருளாதார நெருக்கடி, வீடுகளை இடிப்பு என பல்வேறு பாதிப்புக்கு உள்ளாகி வருகிறார்கள். காரணங்களின்றி ஹமாஸ் இஸ்ரேலை தாக்கவில்லை.

ஹமாஸின் திடீர் தாக்குதல் பயங்கரமானதாகும். அதற்காக பாலஸ்தீன மக்களுக்குத் தண்டனையை வழங்குவதை நியாயப்படுத்த முடியாது. பாதுகாப்பான இஸ்ரேலும், ஐ.நா. தீர்மானங்கள் மற்றும் முந்தைய ஒப்பந்தங்களின்படி சுதந்திரமான நாட்டை பாலஸ்தீனர்களும் காண வேண்டும்' என்று குறிப்பிட்டார்.

இந்தக் கூட்டத்தில் பங்கேற்ற அமெரிக்க வெளியுறவு அமைச்சர் அன்டனி பிளிங்கன், 'பாகிஸ்தானின் லஷ்கர்-ஏ-தொய்பா அமைப்பு மும்பையில் மக்கள் மீது நடத்திய தாக்குதலும், இஸ்ரேலியர்கள் மீது ஹமாஸ் நடத்திய தாக்குதலும் சட்டவிரோதமானதுதான். இதுபோன்ற பயங்கரவாத அமைப்புகளுக்கு நிதி, ஆயுதங்கள் கிடைப்பதை உறுப்பு நாடுகள் தடுக்க வேண்டும்' என்றார்.

இதேவேளை, 'காரணம் இல்லாமல் ஹமாஸ் படையினர் இஸ்ரேலைத் தாக்கவில்லை' எனக் கூறிய ஐ.நா. பொதுச் செயலர் அன்டோனியோ குட்டெரெஸ் பதவி விலக வேண்டும், என்று இஸ்ரேல் வலியுறுத்தியிருக்கிறது.

அவரது கருத்துக்குக் கண்டனம் தெரிவிக்கும் வகையில், குட்டெரெஸுடனான சந்திப்பை இஸ்ரேல் வெளியுறவு அமைச்சர் இலய் கோஹன் ரத்துச் செய்




துள்ளார். தனது கருத்துக்கு அவர் மன்னிப்பு கேட்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

ஐ.நா.வுக்கான இஸ்ரேல் தூதர் கிலாட் இர்டான் செய்தியாளர்களிடம் பேசுகையில், 'ஹமாஸ் படையினர் குழந்தைகளைக் கொன்றுள்ளனர். பயங்கரவாத்தை ஐ.நா. பொதுச் செயலர் பொறுத்துக் கொண்டு நியாயப்படுத்துகிறார். கொடூர சம்பவங்களைத் தடுக்கவே ஐ.நா. உருவாக்கப்பட்டது. அதை செய்யத் தவறும் குட்டெரெஸ் பதவி விலக வேண்டும்', என்று தெரிவித்திருக்கிறார். (04)

# நவாஸ் ஷெரீபின் சிறைத் தண்டனை இடைக்கால அரசு நிறுத்திவைத்தது



அல்-அஜீசியா ஊழல் வழக்கில் பாகிஸ்தானின் முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரீபுக்கு விதிக்கப்பட்டிருந்த 7 ஆண்டுகள் சிறைத் தண்டனையை பஞ்சாப் மாகாண இடைக்கால அரசு நிறுத்திவைத்துள்ளது.

இது குறித்து மாகாண அரசு வெளியிட்டுள்ள அறிக்கையில், நவாஸ் ஷெரீபின் கோரிக்கையை ஏற்று அல்-அஜீஸியா வழக்கில் அவருக்கு விதிக்கப்பட்டுள்ள சிறைத் தண்டனை நிறுத்திவைக்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தானின் 12 ஆவது, 14 ஆவது மற்றும் 20 ஆவது பிரதமராகப் பதவி வகித்து வந்த நவாஸ் ஷெரீபை, பனாமா ஆவண முறைகேடு தொடர்பாக கடந்த 2017 ஆம் ஆண்டு உச்சநீதிமன்றம் பதவி நீக்கம் செய்தது. அதனைத் தொடர்ந்து, அல்-அஜீஸியா உள்ளிட்ட ஊழல் வழக்குகளில் நவாஸ் ஷெரீபுக்கு ஊழல் தடுப்பு நீதிமன்றம் கடந்த 2018 இல் 10 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதித்தது.

அடியாலா சிறையில் அடைக்கப்பட்ட அவருக்கு உடல் நலக் குறைவு ஏற்பட்டுள்ளதாகவும், அவருக்கு லண்டன் சென்று சிகிச்சை அளிக்க வேண்டும் எனவும் நவாஸ் ஷெரீப் தரப்பில் தொடர்ச்சியாக எழுப்பப்பட்ட கோரிக்கையைத் தொடர்ந்து, மனிதாபிமான அடிப்படையில் அவர் நாட்டை விட்டு வெளியேற இஸ்லாமாபாத் உயர்நீதிமன்றம் கடந்த 2019 ஒக்டோபரில் அனுமதி அளித்தது.

அதையடுத்து லண்டனுக்குச் சென்ற நவாஸ் ஷெரீப், அனுமதிக் காலம் முடிந்தும் அங்கேயே தங்கிவிட்டார். அவரை தப்பியோடிய குற்றவாளியாக நீதிமன்றம் அறிவித்தது. நவாஸ் ஷெரீப் லண்டன் சென்றபோது நாட்டின் பிரதமராக இருந்த இம்ரான் கான், நாடாளுமன்றத்தில் 2022 ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானத்தில் தோல்வியடைந்து பதவியிழந்தார்.

அதனைத் தொடர்ந்து, நவாஸ் ஷெரீபின் பாகிஸ்தான் முஸ்லிம் லீக் -நவாஸ் (பிஎம்எல்-என்) கட்சியின் தலைமையில் ஆட்சி மீண்டும் அமைந்தது. நவாஸின் சகோதரர் ஷாபாஸ் ஷெரீப் பிரதமர் பொறுப்பை ஏற்றார். அதையடுத்து, நவாஸ் மீண்டும் நாடு திரும்புவார் என்று அவரது கட்சியினர் தொடர்ந்து கூறி வந்தனர்.

எனினும், அவென்பீல்ட் மற்றும் அல்-அஜீஸியா ஊழல் வழக்கில் அவருக்கு எதிராக கைது உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்த நிலையில், பாகிஸ்தான் திரும்பினால் அவர் உடனடியாக கைது செய்யப்படும் சூழல் நிலவி வந்தது.

இந்நிலையில், அந்த இரு வழக்குகளிலும் நவாஸ் ஷெரீஃபுக்கு ஒக்டோபர 24 ஆம் திகதி வரை ஜாமீன் வழங்கி இஸ்லாமாபாத் உயர்நீதிமன்றம் கடந்த வியாழக்கிழமை தீர்ப்பளித்தது. அது நேற்று செவ்வாய்க்கிழமை காலாவதியான நிலையில், அல்-அஜீஸியா ஊழல் வழக்கில் நவாசுக்கு விதிக்கப்பட்டுள்ள 7 ஆண்டு சிறைத் தண்டனையை பஞ்சாப் மாகாண இடைக்கால அரசு நிறுத்திவைத்துள்ளது. (04)



# காஸாவில் குண்டுவீச்சை தீவிரப்படுத்திய இஸ்ரேல்

காஸா பகுதியில் தனது குண்டுவீச்சை இஸ்ரேல் ராணுவம் தீவிரப்படுத்தியுள்ளது. அந்தப் பகுதிக்குள் இஸ்ரேல் தரை வழித் தாக்குதலை எப்போது வேண்டுமானாலும் தொடங்கும் என்று எதிர்பார்க்கப்படும் நிலையில், விமானத் தாக்குதலையும் அந்த நாட்டு ராணுவம் அதிகரித்துள்ளது.

இது குறித்து அசோசியேட்டட் பிரஸ் செய்தி நிறுவனம் தகவல் வெளியிட்டுள்ளது.

இஸ்ரேலில் நுழைந்து ஹமாஸ் அமைப்பினர் தாக்குதல் நடத்திய பிறகு அந்த அமைப்புக்கும், இஸ்ரேல் ராணுவத்துக்கும் இடையே போர் தொடங்கி செவ்வாய்க்கிழமையுடன் (ஒக்.24) 18 நாள்கள் ஆகின்றன. ஹமாஸ் அமைப்பைக் குறிவைத்து காஸா பகுதியில் தாக்குதல் நடத்துவதாக இஸ்ரேல் ராணுவம் கூறினாலும், அதன் குண்டுவீச்சில் நூற்றுக்கணக்கான சிறுவர்கள் உள்ளிட்ட பொதுமக்கள் உயிரிழந்து வருகின்றனர்.

வான்வழித் தாக்குதல் மட்டுமின்றி, காஸாவுக்குள் தரைவழியாக நுழைந்து தாக்குதல் நடத்தவும் இஸ்ரேல் ராணுவம் ஆயத்தமாக உள்ளது. இந்தச் சூழலில், தரைவழித் தாக்குதலுக்கு உதவியாக காஸா நிலைகளைக் குறிவைத்து இஸ்ரேல் விமானங்கள் கடந்த 24 மணி நேரத்தில் குண்டுவீச்சை மேலும் தீவிரப்படுத்தியுள்ளன, என்று அந்தச் செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது. (04)

# மர்மமான முறையில் காணாமல்போன சீன பாதுகாப்புத் துறை அமைச்சர் பதவி நீக்கப்பட்டுள்ளதாக அறிவிப்பு

கடந்த 2 மாதங்களாக மர்மமான முறையில் மாயமாகியுள்ள சீன பாதுகாப்புத் துறை அமைச்சர் லீ ஷாங்ஃபு பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளதாக தற்போது அறிவிக்கப்பட்டுள்ளது.

அவர் பற்றிய கேள்விகளுக்கு சீன அரசின் தரப்பிலிருந்து சரியான விளக்கம் அளிக்கப்படாத நிலையில், அவர் பதவியிலிருந்து நீக்கப்பட்டிருக்கலாம் என்று ஏற்கெனவே ஊகத் தகவல்கள் வெளியாகின.

அதை உறுதிப்படுத்தும் வகையில், லீ ஷாங்ஃபு பதவியிலிருந்து அகற்றப்பட்டுள்ளதாக தற்போது சீன அரசு ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

ஏற்கெனவே வெளியுறவுத் துறை அமைச்சராக இருந்த கின் காங்கும் இதே போல் மர்மமான பின்னணியில் பதவி நீக்கம் செய்யப்பட்டமை இங்கே நினைவுகூரத்தக்கது. (04)

# அணு ஆயுதத்தைச் சுமந்து செல்லும் ஆற்றலுள்ள கோரி-39 ஏவுகணையை சோதித்தது பாகிஸ்தான்



தனது கோரி-39 ஏவுகணை மற்றும் அதனை ஏவும் சாதனங்களை பாகிஸ்தான் ராணுவம் நேற்று வெற்றிகரமாக ஏவிச் சோதித்துள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இது குறித்து பாகிஸ்தான் ராணுவம் வெளியிட்டுள்ள அறிக்கையில், பயிற்சிக்காக அந்த ஏவுகணை ஏவப்பட்டதாகவும், ராணுவத்தின் தொழிநுட்ப தயார் நிலையை உறுதி செய்வதற்காக இந்தச் சோதனை மேற்கொள்ளப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒலியைவிட வேகமாக, 1,500 கிலோ மீற்றர் தொலைவு வரை பாய்ந்து செல்லக்கூடிய குறுகிய தொலைவு ஏவுகணையான கோரி-39 அணு ஆயுதங்களைச் சுமந்து செல்லும் திறன் கொண்டது என்பது குறிப்பிடத்தக்கது. (04)

# காரைதீவு கோட்டக்கல்விப் பணிப்பாளராக சஞ்சீவன் நியமனம் - கடமை பொறுப்பேற்பு!



(வி.ரி.சகாதேவராஜா)

காரைதீவு கோட்டக்கல்விப் பணிப்பாளராக இலங்கை கல்வி நிருவாக சேவையைச் சேர்ந்த ஆனந்தகுமாரசாமி சஞ்சீவன் நியமிக்கப்பட்டார்.

கல்முனை வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.எஸ். சஹுதுல் நஜீம் முன்னிலையில், காரைதீவு கோட்டக் கல்விப்பணிமனையில் தனது கடமைகளை அவர் நேற்று முன்தினம் பொறுப்பேற்றுக் கொண்டார் .

கல்முனை வலய கணித பாட உதவிக்கல்விப் பணிப்பாளர் கடமைக்கு மேலதிகமாக இந் நியமனம் வழங்கப்படுகிறது.

கோட்டக் கல்விப்பணிப்பாளர் ஜே.டேவிட் ஓய்வு-பெற்றதையடுத்து இந்நியமனம் மேற்கொள்ளப்பட்டது.

கடமைப்பொறுப்பேற்பு நிகழ்வில் காரைதீவு முன்னாள் தவிசாளர் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில், பிரதிக் கல்விப் பணிப்பாளர்களான எம்.எச்.எம்.ஜாபீர், திருமதி வரணியா சாந்தரூபன், திருமதி எம்.எச். றியாசா உள்ளிட்ட கல்வி அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

2017 இல் இலங்கை கல்வி நிருவாக சேவையில் இணைந்து கொண்ட ஆனந்தகுமாரசாமி சஞ்சீவன் கிழக்கு பல்கலைக்கழக பௌதீகவிஞ்ஞான பட்டதாரி யாவார். காரைதீவைச் சேர்ந்த இவர் தற்போது கல்வி முதுமாணி, விஞ்ஞான முதுமாணி பட்டப் பின்பட்டப் படிப்பை தேசிய கல்வி நிறுவனம் மற்றும் பேராதனை பல்கலைக்கழகத்தில் தொடருகிறார்.

# கந்தளாய் தளவைத்தியசாலைக்கு இரத்த சுத்திகரிப்பு இயந்திரம்



(ஹஸ்பர்)

சிறுநீரக நோயாளர்களின் இரத்தத்தை சுத்திகரிக்க உதவும் இரத்த சுத்திகரிக்கும் இயந்திரம் கந்தளாய் ஆதார வைத்தியசாலைக்கு நேற்று வைத்தியசாலையில் வைத்து திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கபில நுவன் அத்துகோரள தலைமையில் வழங்கி வைக்கப்பட்டது.

கந்தளாய், தம்பலகாமம், சேருவில போன்ற பிரதேச செயலகப் பிரிவுகளில் வசிக்கும் பெருந்தொகையான மக்கள் தமது பிரதான வைத்தியசாலையாக கந்தளாய் ஆரம்ப வைத்தியசாலையில் சிகிச்சை பெற வருகின்றனர். இவர்களில் சிறுநீரக நோய்க்கு சிகிச்சை பெற வரும் நோயாளிகள் கந்தளாய் வைத்தியசாலையில் இரத்தம் சுத்திகரிக்கும் இயந்திரம் இல்லாத காரணத்தினால் பொலன்னறுவை, அனுராதபுரம், திருகோணமலை போன்ற தூர வைத்தியசாலைகளுக்கு செல்ல வேண்டியுள்ளது. இது தொடர்பில் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் அவர்களுக்கு தெரியப்படுத்தியதுடன், ஐ.ஓ.சி எரிபொருள் நிறுவனத்திடம் முன்வைக்கப்பட்ட வேண்டுகோளுக்கு இணங்க, கந்தளாய் தள வைத்தியசாலைக்கு அந்த நிறுவனத்தின் நிதிப் பங்களிப்பின் அடிப்படையில் புதிய இரத்த வடிகட்டும் இயந்திரம் வழங்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வில் கிழக்கு மாகாண ஆளுனர் செந்தில் தொண்டமான்,மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் திருமதி ஜெ.ஜெ.முரளிதரன்,மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# உள்ளூராட்சி செயற்றிறன் மதிப்பீட்டில் கல்முனை மாநகர சபை முன்னிலை



(ஏ.எஸ்.மௌலானா)

கிழக்கு மாகாண உள்ளூராட்சி மன்றங்களுக்கிடையிலான செயற்றிறன் மதிப்பீட்டில் கல்முனை மாநகர சபை முதலாம் படிநிலைக்கு உள்வாங்கப்பட்டுள்ளது.

உள்ளூராட்சி மன்றங்களுக்கிடையே செயற்றிறன் மதிப்பீட்டை மேற்கொண்டு, அதற்கமைவாக இம்மன்றங்களுக்கு நிதி ஒதுக்கீடுகள் மற்றும் ஏனைய வளங்களை உள்ளூர் அபிவிருத்திக்கான ஒத்துழைப்புத் திட்டத்தின் ஊடாக வழங்குகின்ற செயற்பாடு வருடா வருடம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இதன் அடிப்படையில் கடந்த காலங்களில் 2ஆம், 3ஆம் படி நிலைகளில் இருந்து வந்த கல்முனை மாநகர சபையானது இவ்வருட ஆரம்பம் முதல் மாநகர ஆணையாளர் ஏ.எல்.எம்.அஸ்மி தலைமையில் தொடர்ச்சியாகச் செயற்படுத்தி வந்த நிர்வாகச் சீர்படுத்தல்கள், சீரான ஆளணி முகாமைத்துவம், திட்டமிட்ட அடிப்படையிலான உட்கட்டமைப்பு விருத்திகள், நவீனமயப்படுத்தப்பட்ட முகப்பு அலுவலக வசதிகள் என்பவற்றோடு மாநகர சபையின் உத்தியோகத்தர் மற்றும் ஊழியர் குழாத்தின் அயராத முயற்சிகளின் பயனாக இவ்வருட செயற்றிறன் மதிப்பீட்டில் பாரிய வளர்ச்சி வீதத்தினை வெளிப்படுத்தியதன் அடிப்படையிலேயே முதலாம்படி நிலைக்கு உள்வாங்கப்பட்டிருக்கிறது.

இதன் பிரகாரம் முதலாம் படி நிலைக்கு தெரிவாகியுள்ள உள்ளூராட்சி மன்றங்களுக்கான விசேட நிதி ஒதுக்கீடுகள் மற்றும் வளங்களைப் பெறுவதற்கான வாய்ப்பை கல்முனை மாநகர சபையும் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# கலாசாலை நூற்றாண்டு கால சிறப்புரையில் ஓய்வு பெற்ற விரிவுரையாளருக்கு கௌரவம்

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் நூற்றாண்டு கால சிறப்புரை அரங்க நிகழ்வு அதிபர் ச.லலீசன் தலைமையில் இன்று காலை நடைபெற்றது.

இந்நிகழ்வில் அதிதிப் பேச்சாளராக பலாலி மற்றும் கோப்பாய் ஆசிரியர் கலாசாலைகளின் முன்னாள் விரிவுரையாளர் இ.மருதலிங்கம் கலந்து சிறப்பித்தார்.

அதிதிப் பேச்சாளருக்கான அறிமுக உரையை கலாசாலையின் உப அதிபர் சத்யா ரஞ்சித் ஆற்றினார். நிகழ்வின்போது அதிதிப் பேச்சாளர் கலாசாலை முகாமைத்துவக் குழுவினரால் கௌரவிக்கப்பட்டார்.



# பாடசாலைப் பாடங்களில் தியாகிகளின் வரலாறுகளை நீக்க முயற்சி நடக்கிறது!

## தமிழக ஆளுநர் ஆர்.என். ரவி கருத்து



தமிழகத்தில் பாடசாலைப் பாடங்களில் சுதந்திரப் போராட்டத் தியாகிகளின் வரலாறுகளை நீக்கும் முயற்சிகள் நடைபெறுகின்றன, என்று தமிழக ஆளுநர் ஆர். என். ரவி. குற்றஞ்சாட்டியுள்ளார்.

சுதந்திரப் போராட்டத்தில் உயிர் துறந்த மருது சகோதரர்களின் நினைவு தின நிகழ்ச்சி திருச்சியில் திங்கட்கிழமை நடைபெற்றது.

இதில் தலைமை வகித்த தமிழக ஆளுநர், நாட்டு விடுதலைக்காக போராடியவர்களின் தியாகங்களை அடுத்த தலைமுறையினருக்கு நினைவுபடுத்தக் கூடிய வகையில் இந்த நிகழ்ச்சி நடப்பது சிறப்பு. பாடசாலைப் பாடப் புத்தகங்களில் சுதந்திரப் போராட்ட தியாகிகள் குறித்த வரலாறுகளை நீக்க முயற்சி நடைபெறுகிறது. இதன் காரணமாக, சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்டவர்களை அவர்கள் சார்ந்த சமுதாயம் கொண்டாடும் நிலைமைக்கு அவர்கள் தள்ளப்பட்டுள்ளனர்.

இந்தியாவுக்கு சுதந்திரம் வேண்டாம், சுதந்திரம் கிடைத்த நாள் கறுப்புநாள் எனக் கூறியவர்கள் தமிழகத்தில் இருந்தனர். இந்தியாவைப் பிரித்தாளும் திட்டத்தை செயல்படுத்திய பிரிட்டிஷாருக்கு பலர் உதவிகரமாக இருந்துள்ளனர். லண்டன் அருங்காட்சியகத்தில் ஆங்கிலேயர்களுக்கு யார் ஏஜெண்டுகளாக இருந்தனர் என்பதை பலர் ஆவணப்படுத்தியுள்ளனர். இதை மக்கள் தெரிந்து கொண்டால் பலரின் உண்மை முகம் வெளிப்பட்டு விடும்.

காந்தி ஜெயந்தி விழாவின்போது நடந்த புகைப்படக் கண்காட்சியில், மகாத்மா காந்தியடிகள் தமிழகத்துக்கு 18 முறை வந்தது குறித்த படங்கள் இடம்பெறவில்லை. அதில் திராவிட இயக்க கருத்தியலைக் கொண்ட ஒருவர்கூட இல்லாததால், இந்த ஆண்டு புகைப்படக் கண்காட்சியும் நடைபெறவில்லை.

மகாத்மா காந்தியடிகள், வல்லபபாய் படேல், பகத் சிங் உள்ளிட்ட சுதந்திரப் போராட்ட தியாகிகள் தமிழகத்தில் பிறந்திருந்தால் அவர்களையும் ஜாதிச் சங்கத் தலைவர்களாக மாற்றியிருப்பர்.

முதல் சுதந்திரப் போராட்டத்துக்கு அடிகோலிய மருது சகோதரர்களுக்கு அரசு விழா எடுக்காததால், அவர்கள் சார்ந்த ஜாதிச் சங்கங்கள் பாராட்டு விழா எடுக்கும் நிலைமை ஏற்பட்டுள்ளது. சுதந்திரம் கிடைக்க தியாகம் செய்தவர்களை எந்நாளும் மறக்கக் கூடாது. பாரதியார், வ.உ.சி. மருது சகோதரர்கள் போன்றவர்கள் வாழ்ந்த தமிழ்நாடு ஒரு புண்ணிய பூமி. கடின உழைப்பு, அர்ப்பணிப்புடன் பணியாற்றினால் இளம் தலைமுறையினர் உயர் நிலையை அடையலாம், என்று தெரிவித்திருக்கிறார். (04)



## தமிழக ஆளுநரின் கருத்துக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் பதில்!

பாடசாலைப் பாடங்களில் தியாகிகளின் வரலாறுகளை நீக்க முயற்சி நடக்கிறது, என்ற தமிழக ஆளுநரின் கருத்துக்கு தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பதிலளித்திருக்கிறார்.

தி.மு.க. ஆட்சி அமையும் போதெல்லாம் விடுதலை வீரர்களின் புகழ் போற்றப்படுகிறது, என்று தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார்.

மருது பாண்டியர்கள் நினைவு நாளையொட்டி தமிழக முதல்வர் தனது சமூக வலைத்தளத்தில் இட்டிருக்கும் பதிவில், தமிழ் நிலத்தின் உரிமைகளைக் காக்கத் தங்கள் உயிரையும் துச்சமென நினைத்த மான மறவர் மருதிருவரின் புகழ் ஓங்குக.

சின்ன மருதும், பெரிய மருதும் பீரங்கிகளுக்கு முன்னால் வளரியால் வாகை சூடியவர்கள். அவர்கள் வைத்திருந்த வளரிக்கு முன்னால் பீரங்கிகள் சரியும் என்று1801 ஆம் ஆண்டு எழுதினார் பிரிட்டிஷ் அதிகாரி கர்னல் வெல்ஷ்.

தி.மு.க. அரசு அமைந்ததும் மருது சகோதரர்கள் சிலையை சென்னையில் அமைக்க 34 லட்சம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுச் சிலை திறந்து வைக்கப்பட்டுள்ளது. முன்னாள் முதல்வர் கருணாநிதி கைவண்ணத்தில் தென்பாண்டிச் சிங்கம் எனக் கலை வடிவம் பெற்று, வாளுக்கு வேலி வழியாகக் காலத்தால் அழியாத காவியமாக அவர்களது கதை நிலைத்திருக்கிறது.

தி.மு.க. அரசு அமையும்போதெல்லாம் விடுதலை வீரர்களின் புகழ் திக்கெட்டும் போற்றப்படுகிறது.

நஞ்சு தோய்ந்த எண்ணங்களோடு நயமாகப் பேசும் திடீர் குபீர் நாட்டுப் பற்றாளர்களின் வரலாற்றைத் தேசத் தந்தை காந்தியாரின் இறுதி நாள்கள் சொல்லும், என்று அவர் கூறியுள்ளார். (04)

## அபேக்ஷா தமிழ் நாடகத் திருவிழா யூனியன் கல்லூரியில் ஆரம்பம்

கலாசார அலுவல்கள் அமைச்சின் கீழ் இயங்கும் டவர் மண்டப அரங்க மன்றத்தின் அபேக்ஷா தமிழ் நாடகத் திருவிழா யாழ்ப்பாணத்தில் இன்று ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் இன்று காலை ஆரம்பமான இந்நாடகத் திருவிழா நாளையும் நாளை மறுதினமும் (25,26,27) என தொடர்ந்து மூன்று நாட்கள் நடைபெறவுள்ளது.

கலாசார அமைச்சின் நாடக மத்திய நிலையமாக விளங்கும் டவர் மண்டபத்தின் தமிழ்ப் பிரிவுப் பொறுப்பாளர் கலாநிதி சண்முகசர்மா ஜெயபிரகாஷ் தலைமையில் ஆரம்பமாகிய இந்நாடகத் திருவிழாவில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண பிரதம செயலாளர் சமன் பந்துல கலந்துகொண்டிருந்தார்.

கொழும்பில் எல்பிஸ்டன் மற்றும் டவர் அரங்குகளில் வருடந்தோறும்நடைபெறுகின்ற நாடகத்திருவிழாவானது டவர் மண்டப அரங்க மன்றத்தின் ஏற்பாட்டில் முதல் தடவையாக இம்முறை யாழ்ப்பாணத்தில் நடைபெறுகின்றமை குறிப்பிடத்தக்கது.





வட மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் மைத்திரி குணரட்ன, கலாநிதி ஆறுதிருமுருகன், யூனியன் கல்லூரி அதிபர் வரதன், வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் பற்றிக் நிரஞ்சன் உட்பட கல்வி மற்றும் கலாசார அதிகாரிகள், ஆசிரியர்கள், மாணவர்கள், கலைஞர்கள் எனப் பலரும் நிகழ்வில் பங்கேற்றிருந்தனர். (01)





# உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடரில் தென்னாபிரிக்க அணிக்கு இலகுவான வெற்றி!

2023 உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடரில் நேற்று நடைபெற்ற தென்னாபிரிக்கா - பங்களாதேஷ் அணிகளுக்கு இடையிலான போட்டியில் தென்னாபிரிக்க அணி இலகுவான வெற்றியைப் பெற்றுள்ளது.

போட்டியின் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற தென்னாபிரிக்க அணி முதலில் துடுப்பெடுத்தாடி,

50 ஓவர்கள் நிறைவில் 5 விக்கெட்டுக்களை இழந்து 382 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. குயின்ரன் டி கொக் 174 ஓட்டங்களையும், ஹென்றிச் கிளாசன் 90, எய்டன் மார்க்ரம் 60 ஓட்டங்களையும் எடுத்திருந்தனர்.

பங்களாதேஷ் அணியின் ஹஸன் மஹ்முட் 2 விக்கெட்டுக்களை வீழ்த்தியிருந்தார்.

383 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்குடன் களம் இறங்கிய பங்களாதேஷ் அணி 46.4 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 233 ஓட்டங்களை மட்டுமே பெற்றுக்கொள்ள, தென்னாபிரிக்க அணி 149 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

பங்களாதேஷ் அணியின் மஹ்மதுல்லா தனியாகப் போராடி 111 ஓட்டங்களைச் சேர்த்திருந்தார். தென்னாபிரிக்க அணியின் ஜெரால்ட் கோட்ஸி 3 விக்கெட்டுகளையும், மார்கோ ஜான்சென், லிஸாட் வில்லியம்ஸ், ரபாடா ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளையும் கைப்பற்றினர்.

போட்டியின் ஆட்ட நாயகனாக குயின்ரன் டி கொக் தெரிவானார்.

# உலகின் சிறந்த முதல் பத்து மொழியியலாளர்கள் தரவரிசையில் பேராசிரியர் சுரேஷ் கனகராஜா

அமெரிக்காவின் ஸடான்போர்ட் பல்கலைக்கழகம் வெளியிட்டுள்ள ஆய்வு வெளியீடுகளின் மேற்கோள்களின் (citations) சமீபத்திய தரவரிசையில் உலகின் சிறந்த முதல் பத்து மொழியியலாளர்களுக்குள் பேராசிரியர் சுரேஷ் கனகராஜா இடம் பிடித்துள்ளார்.

அவர் கடந்த ஆண்டு நீண்ட வாழ்க்கை மேற் கோள்களின் (career-long citations) அடிப்படையில் 10 ஆம் இடத்தையும், ஒரு வருடத்தில் மேற்கொள்ளப்பட்ட மேற்கோள்களில் 9 ஆம் இடத்தையும் பெற்றார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

பேராசிரியர் சுரேஷ் கனகராஜா தற்போது பென்சில்வேனியா மாநில பல்கலைக்கழகத்தில் பயன்பாட்டு மொழியியல் மற்றும் ஆங்கிலத்துறையில் எட்வின் எர்வே ஸ்பார்க்ஸ் பேராசிரியராக உள்ளார்.

இவர் தனது ஆரம்பக் கல்வியை யாழ் புனித ஜோன்ஸ் கல்லூரியில் கற்றார். இவர் 1984 ஆம் ஆண்டு யாழ். பல்கலைக்கழகத்தில் தனது ஆசிரியப் பணியைத் தொடங்கி, 1994 ஆம் ஆண்டு வரை ஆங்கில மொழி கற்பித்தல் துறையில் விரிவுரையாளராகவும் துறைத் தலைவராகவும் இருந்தார். 1985 முதல் 1990 வரை அமெரிக்காவில் கலாநிதிப் பட்டத்தை முடித்த பின்னர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்குத் திரும்பினார்.



இவரது ஆரம்ப கால ஆய்வுகள், 1993 இல் யாழ்ப்பாணத்தில் போர்ச்சூழல் நிலவிய காலகட்டத் தில் யாழ்ப்பாணத்தில் இருந்தே சர்வதேச ஆய்வு வெளியீடுகளுக்குச் சமர்பிக்கப்பட்டன என்பதும் குறிப்பிடத்தக்கது.

# வீட்டு மனைபொருளாதாரத்தை உயர்த்த 200 பழமரக்கன்றுகள் வழங்கப்பட்டன



(வி.ரி.சகாதேவராஜா)

பெரன்டினா நிறுவனத்தின் அனுசரணையுடன், வீட்டு மனைபொருளாதாரத்தை உயர்த்த 200 பழமரக்கன்றுகள் வழங்கப்பட்டன.

நாவிதன்வெளி பிரதேச செயலகத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்ட 20 பயனாளிகளுக்கு அவர்களின் வீட்டு மனை பொருளாதாரத்தை உயர்த்தும் நோக்குடன் பழமரக்கன்றுகளை வழங்கி வைக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் நடைபெற்றது.

நாவிதன்வெளி பிரதேச செயலாளர் ஆர்.ராகுலநாயகியின் வழிகாட்டலுக்கு அமைய உதவிப் பிரதேச செயலாளர் பி.பிரணவரூபன் தலைமையில் விதாதா வள மத்திய நிலையத்தில் இந்நிகழ்வு நடைபெற்றது.

பெரன்டினா நிறுவனத்தின் அனுசரணையுடன் நடைபெற்ற இந்த நிகழ்வில் பெரன்டினா நிறுவனத்தின் முகாமையாளர் கோ.கோபிகரன், வியாபார அபிவிருத்தி உத்தியோகத்தர் ஜெயரூபன் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

அதேவேளை, விவசாய உத்தியோகத்தர் திருமதி. சமேதா கீர்த்தனன் வீட்டுப் பொருளாதாரத்தை உயர்த்தும் வழிமுறைகள் குறித்து விளக்கமளித்தார்.

இந்த நிகழ்வில் விதாதா வெளிக்கள இணைப்பாளர் கே.நவநீதன், சுற்றாடல் உத்தியோகத்தர் கே.சிறீகரன், கலாசார உத்தியோகத்தர் ஏ.எல்.எம்.ஷினாஸ், கிராம சேவை உத்தியோகத்தர் ஏ.பிரசன்னா உட்பட பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், பெரன்டினா நிறுவனத்தின் உத்தியோகத்தர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

# மாற்றுத்திறனாளி வாக்காளர்களுக்கு புதிய அடையாள அட்டை டிசம்பர் 3 ஆம் திகதிக்குள் வழங்குவதற்கு ஏற்பாடுகள் ஆரம்பம்

## கிளிநொச்சி மாவட்டத்திலேயே அதிகளவானோர்

மாற்றுத்திறனாளி வாக்காளர்களுக்கு அடையாள அட்டை வழங்குதல் தொடர்பான அறிமுக நிகழ்வொன்று தேர்தல் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க தலைமையில் அநுராதபுரம் மாவட்ட செயலகத்தில் அண்மையில் இடம்பெற்றது.

மாற்றுத்திறனாளி வாக்காளர்களுக்கு அடையாள அட்டை வழங்குவது குறித்த பேச்சு நீண்டகாலமாக இருந்து வருவதாகவும் அதனை தற்போது நடைமுறைப்படுத்த வேண்டும் எனவும் அவர் இங்கு வலியுறுத்தினார்.

அங்கு மேலும் கருத்து தெரிவித்த தேர்தல் ஆணையாளர் நாயகம், “நாட்டின் அரசியல் நீரோட்டத்தில் அனைவரும் உள்வாங்கப்பட வேண்டும், அந்த இலக்கை நோக்கி மாற்றுத்திறனாளிகளுடன் செல்லும் போது அவர்களுக்கு அடையாள அட்டை இல்லாதது பிரச்சினையாக உள்ளது. மாற்றுத்திறனாளி வாக்காளர்களை ஒப்பிடுகையில் கிளிநொச்சி மாவட்டத்திலேயே அதிகளவான மாற்றுத்திறனாளி வாக்காளர்கள் உள்ளனர். யுத்தம் காரணமாகவே இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது.

இந்த முன்னோடித் திட்டத்தின் கீழ் மாற்றுத்திறனாளிகளுக்கான 5,000 அடையாள அட்டைகளை டிசம்பர் 3 ஆம் திகதிக்குள் வழங்கவுள்ளோம். சர்வதேச மாற்றுத்திறனாளிகள் தினம் என்பதன் காரணமாகவே டிசம்பர் 3 ஆம் திகதி இதற்குத் தெரிவு செய்யப்பட்டது.

பார்வைக் குறைபாடு உள்ளவர், பேச்சுக் குறைபாடு உள்ளவர், செவித்திறன் குறைபாடு உள்ளவர் என்பது அடையாள அட்டையில் குறிப்பிடப்பட்டிருக்கும். தற்போதைக்கு, மேற்குறிப்பிட்ட மாற்றுத்திறனாளிகளுக்கு மட்டுமே அடையாள அட்டை தயார் செய்யப்படுகின்றது. எதிர்காலத்தில் ஏனைய மாற்றுத்திறனாளிகளுக்கும் மேற்படி அடையாள அட்டையை வழங்க ஏற்பாடுகள் செய்யப்படும்”, எனத் தெரிவித்தார். (15)


JRIDE
BEYOND THE ROAD
ONLINE TAXI APP
FROM JAFFNA
ஆட்டோ கட்டணங்களால் ஆடிப்போயுள்ளீர்களா?
கவலையினை விடுங்கள்.
நாங்கள் தயாராகிவிட்டோம்!
யாழ்ப்பாணத்தில் இருந்து உங்களுக்காக உருவாக்கப்பட்ட ரக்சி அப் (Taxi App)
உங்கள் பயணங்களை பாதுகாப்பானதாகவும் மகிழ்ச்சிகரமானதாகவும் செலவு குறைவாகவும் அமைத்துக்கொள்ளுங்கள்.
இப்போதே Play Store இல் இருந்து JRide - Beyond The Road App இனை இறக்கி உங்கள் தொலைபேசி இலக்கத்தை பயன்படுத்தி உங்கள் கணக்கை பதிவு செய்யலாம்!
jride
JRide - Beyond the Road
Speed IT net • Travel & Local
Install
JRide Driver: Drive & Deliver
Speed IT net • Travel & Local
Install
இலகு முறையில் கணக்கை பதிவு செய்து உங்கள் பயணத்தை தொடங்கலாம்!
YOU CAN EASILY REGISTER & BOOK YOUR RIDE
GET IT ON Google Play
Download on the App Store
SEARCH NEAR VEHICLES
+94 21 222 8358
JRIDE TAXI SERVICE
SPEED IT NET
பரமேஸ்வரா சந்தி,
136, பலாலி வீதி
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்
+94 703 563213
www.jride.lk




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.68, குருசெட் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 25.10.2023இல் வெளியிடப்பெற்றது.